2011 ஜனவரி 10] [திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்]

ஒரு பகுதி என்பதாலே தொடர்ந்து நான் போக்குவரத்துத் துறை அமைச்சரிடத்திலே கேட்டு வருகிறேன். அதையும் நீங்கள் செய்யவேண்டும். கல்வித் துறை அமைச்சருக்கு நான் தொடர்ந்து கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கிற பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியான நொச்சலூர், மேல்சவலாம்பாடி உள்ளிட்ட பகுதிகளில் இருக்கிற பள்ளிகளை, உயர்நிலை, நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) கோயம்புத்தூர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கோயம்புத்தூர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் (Syndicate), அலுவல் சார்பற்ற உறுப்பினராகப் பணிபுரிய ஒரு சட்டப் பேரவை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகப் பதிவாளரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய குழு உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 11-1-2011 அன்று நண்பகல் 12-00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். வேட்பு மனுக்கள் அன்று மாலை 3-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 12-1-2011 அன்று மாலை 3-00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

[பேரவைத் தலைவர்] [2011 ஜனவரி 10

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(11-1-2011)* செவ்வாய்க்கிழமை காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 14-7-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் II(2)/MW/362(a)/*2006* ஆம் எண் அறிவிக்கையில் திருத்தங்கள் செய்தது குறித்தும் மற்றும் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த காங்கேயம் பேரூராட்சியில் அடங்கியுள்ள உள்ளூர் பகுதிகளை இரண்டாம் நிலை நகராட்சியாக வகைப்பாடு செய்தது குறித்தும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நதி 5) துறையின் *1-6-2010* ஆம் நாளிட்ட *99* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *[1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

2. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில் திருத்தங்கள் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து வரப்பெற்ற *15-12-2008* ஆம் நாளிட்ட TNERC/SC/7-11, *27-2-2009* ஆம் நாளிட்ட TNERC/SC/7-12, *15-6-2009* ஆம் நாளிட்ட TNERC/SC/7-13, *9-10-2009* ஆம் நாளிட்ட TNERC/SC/7-15 மற்றும் *29-12-2009* ஆம் நாளிட்ட TNERC/SC/7-16-ல் வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கைகள். *[2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

3. 29-2-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II, பிரிவு-2ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் II(2)/வ.வ.ப/119(b-1)/2008 ஆம் எண்